**Starting time 12.36 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.36/2003**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 19.01.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : அங்கமுத்து | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அப்பாவின் சொத்தில் 3-ல் ஒரு பங்கு கேட்டு மகள் வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் புல எண் என்னவென்றால், 75/3, 74/1, 73/7, 73/6, 73/10, 70/7, 73/2. மொத்தம் நிலம் எவ்வளவு என்றால், தெற்கில் 2 ½ ஏக்கர், புஞ்சையில் வடக்கு 5 ஏக்கர். மேற்படி சங்கதியை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால், ஆமாம். வழக்கு தாக்கல் செய்தபோது என்னுடைய மனைவி செல்லம்மாள் வழக்கு தாக்கல் செய்தார் என்றால், ஆமாம்.

2. தற்போது செல்லமாளுக்கு என்ன ஆனது என்றால், 2021-ல் என் மனைவிக்கு பக்கவாதம் ஏற்பட்டு கை, கால் விளங்காமல் போய் பேச்சு வரவில்லை, அதனால் நான் அவருக்கு பொது அதிகார முகவராக இருந்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால், ஆமாம். பொது அதிகார பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். என் மனைவிக்கு முதல் பிரதிவாதி என்ன உறவு என்றால், தங்கை, 2-ஆம் பிரதிவாதி தம்பி. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் யார் என்றால், பக்கத்து நிலத்துக்காரார்கள்.

நான் மேலே சொன்ன அனைத்து புல எண்களிலும் உள்ள சொத்துக்கள் அனைத்தும் 1-ஆம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் டி கார்டு மூலம் வழங்கப்பட்ட சொத்துக்கள் என்றால், இல்லை.

3. தற்போது என்னிடம் காட்டப்படும ஆவணமானது 03.06.1992-ல் 1-ஆம் பிரதிவாதிக்கு அரசாங்கம் புல எண். 75/3, 74/1, 73/7, 73/10, 73/6 ஆகியவை வழங்கப்பட்டதற்கான உத்தரவு என்றால், போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம். உண்மையை ஒப்புக் கொண்டால் எனது வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அந்த உத்தரவை அரசாங்கமே தள்ளுபடி செய்துவிட்டது, தள்ளுபடி செய்ததற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. உண்மையை ஒப்புக் கொண்டால் என் வழக்கிற்கு பாதகமாக போய்விடும் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் கூறுவது போல அரசாங்கம் தள்ளுபடி செய்யவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 12.45 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.